தால், வைத்த மரங்கள் பட்டுப் போகின்றன. அவற்றிற்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு என்ன திட்டம் இருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: காடுகளில் எல்லாம் தண்ணீர் வசதி செய்து கொடுப்பதென்ருல், அதிகமாகச் செலவாகும். இன்றைய தினம் செலவு அவ்வளவு இல்லை. மழை காலத்தில் கன்றுகளை நட்டு வைக்கிருேம். மழை இல்லாமல் போய்விட்டால், 100-க்கு 40 அல்லது 50 பட்டுப்போய் விடுகிறது.

திரு. கோ. சி. மணி: புதிதாக பயிராக்கப்பட்ட மரங்கள் என்ற இனத்தில், ஆலங்கிளைகள் வைத்துப் பயிராக்கப்படுகிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: ஹைவேஸிலுள்ள ரஸ்தாக்களில் தான் அவைகளை வைத்துக்கொண்டிருக்கிருர்கள். காட்டிலாக்காவினர் வைக்கவில்லை.

திரு. ர. ஜீவரத்னம்: வட ஆற்காட்டில் ஜவ்வாது மலைப்பகுதி போன்ற இடங்களில் தேக்கு, வேங்கை முதலிய மரங்கள் வைத்துப் பயிரிட முடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: வட ஆற்காடு ஜில்லா என்பது மட்டுமல்ல. எல்லா ஜில்லாக்களிலுமே மரங்களை வைத்துப் பயிரிடுவதுதான் திட்டம்.

இயங்கும் பதிவு அலுவலகங்கள்

* 265 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பத்திரப் பதிவு அலுவலகங்களை அதிகரிப்பதற்குப் பதிலாக கிராமங்கள்தோறும் சென்று பத்திரம் பதிவு செய்ய Mobile Sub-Registrar- களை நியமிக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன்: இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி: பொது ஜனங்களின் சௌகரியத்தை முன்னிட்டு, பத்திரங்கள் பதிவு செய்ய, மொபைல் சப் ரிஜிஸ்தார்களை நியமிப்பது பற்றி அரசாங்கம் பரிசிலிக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன்: பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. பாதுகாப்பு இல்லை. பண விரயம் அதிகமாகும். இன்னும் சில சங்கடங்கள் இருப்பதனுல், மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி: அமைச்சர் அவர்கள் பாதுகாப்பு இல்லை என்று சொன்னர்கள். இப்பொழுது ஒவ்வொரு ஊரிலும் தொண்டர் படை இருக்கிறது. தொண்டர் படையைப் பாதுகாப்பாக வைத்துச் செய்ய முடியாதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அந்தப் பாதுகாப்பைச் சொல்லவில்லை. தொண்டர் படை இதைப் பாதுகாக்க முடியாது.

திரு. ஜே. மாதா கவுடர் : பத்திரப் பதிவு இலாகா என்று ஒன்று தனியாக இருப்பதை ஒழித்துவிட்டு, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் இருக்கின்ற காரணத்தினால், பஞ்சாயத்து யூனியனிலே இரண்டு குமாஸ்தாக்களைப் போட்டுவிட்டால் அந்த வேலையைச் செய்ய முடியுமே. இதை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இப்பொழுது நல்ல முறையில் நடக்கின்றது. பஞ்சாயத்து யூனியனிடம் கொடுப்பதாக உத்தேசம் இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : பத்திரப் பதிவு நிலையங்களிலே ஸிம்பிள் மாட்கேஜ் வாங்கக்கூடியவர்கள்கூட, டிக்ளரேஷன் கொடுக்கவேண்டுமென்று கோரப்படுகிறது. அதனால் சப் ரெஜிஸ்டிரார்களுக்கு அதிகமான வேலை இருப்பதால், அதை மாற்றுவதற்கு ஏதாவது திட்டமிருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : மூலக் கேள்வி இயங்கும் பத்திரப் பதிவு நிலையத்தைப் பொருத்தது. ஏற்கனவே இந்தக் கேள்விக்கு பதில் அளித்திருக்கிறேன். தனியாகக் கேள்வி போட்டால், விடை அளிக்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : பல இடங்களிலிருந்து சப் ரெஜிஸ்டிரார் ஆபீசுகள் நிறுவ வேண்டுமென்று விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே ஒரு ஃபேஸ்டு புரோகிராமாக வைத்து ஒரு வருடத்திற்கு இவ்வளவு ஆபீசுகள் திறக்கப்படுமென்று திட்டம் வகுக்கப்படுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அவ்வப்போது எங்கெங்கிருந்து கோரிக்கைகள் வருகின்றனவோ, அவற்றைப் பரிசீலனை செய்து, ஆண்டுதோறும் சப்ரெஜிஸ்டிரார் ஆபீசுகள் திறந்து கொண்டிருக்கிறோம்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : நகர பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளுக்குப் பத்திரப் பதிவு அதிகாரங்கள் கொடுக்கப்படலாமென்று 1959-ம் ஆண்டு சட்டத்தில் இருக்கிறது. இது வரையில் கொடுக்கப்படாததன் காரணம் என்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : இது இயங்கும் பத்திரப் பதிவு நிலையத்தைப் பொருத்தது. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

இரும்புத் தாது (வட ஆற்காடு மாவட்டம்)

*** 266 கேள்வி.—திரு. ர. ஜீவரத்னம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா, போளூர் தாலுகா, சேத்துப்பட்டு பிளாக்கில் இரும்புத் தாது கனிப்பொருள் படர்ந்து இருப்பதாக சர்க்காருக்குத் தகவல் கிடைத்ததா ?